**இலங்கை வெளிநாட்டுச் சேவைக்கு புதிதாக உட்சேர்க்கப்பட்டவர்கள் கடமைகளை பொறுப்பேற்றல்**

இலங்கை வெளிநாட்டுச் சேவைக்கு (இ.வெ.சே) 2018இல் உட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை 2018 மே 02ஆந் திகதியாகிய இன்று கொழும்பிலுள்ள வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் பொறுப்பேற்றுக் கொண்டதுடன், வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் வரவேற்கப்பட்டனர்.

21 உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய 2018ஆம் ஆண்டிற்கான இ.வெ.சே. தொகுதியாது, இ.வெ.சே. குறிப்பு 2016 இன் ஏற்பாடுகள் மற்றும் 2017 மார்ச் 17ஆந் திகதி கொண்ட 2011ஆம் இலக்கமுடைய வர்த்தமானி அறிவித்தல் ஆகியவற்றின் பிரகாரம் பரீட்சைகள் திணைக்களத்தினால் 2017ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சை ஒன்றின் வாயிலாக பொதுச் சேவை ஆணைக்குழுவினால் இலங்கை வெளிநாட்டுச் சேவைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் பணியமர்த்தப்படுவதற்கு முன்னர், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவகத்தினால் (வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் பயிற்சி வழங்குனர்) வடிவமைக்கப்பட்டுள்ள, ஏனைய அரச அமைச்சுக்கள் மற்றும் முகவர்களை பழக்கப்படுத்திக்கொள்ளும் நிகழ்ச்சிகளை உள்ளடக்கிய சுருக்கமானதொரு பயிற்சி நிகழ்ச்சியை தொடர்வார்கள். 2018ஆம் ஆண்டிற்கான தொகுதியானது பின்வருமாறு (சிரேஷ்டத்துவத்தின் அடிப்படையில்):

1. செல்வி. எச்.டி.எஸ். ரூபதுங்க
2. செல்வி. பி.என். திசாநாயக்க
3. செல்வி. டப்ளியு.பி.எம்.பி.என். வீரசேகர
4. திருமதி. எஸ்.ஏ. அமீனுதீன்
5. செல்வி. எம்.ஏ.டி.டி. பெரேரா
6. செல்வி. ஏ.டி.யு. அதுரலிய
7. செல்வி. டி.எஸ். திசாநாயக்க
8. திரு. எம்.எம்.டி.கே. பண்டார
9. செல்வி. எஸ். சசிரேஹா
10. செல்வி. ஜி.ஏ.டி.எஸ்.சி. டயஸ்
11. செல்வி. எச்.எம்.டி.ஆர். ஹேரத்
12. செல்வி. டி.பி. மிஹிராவி
13. செல்வி. வி. நிஷாந்தினி
14. திரு. கே.எம்.எஸ். தேஷப்ரேம
15. திருமதி. என். கஜித்ரா
16. செல்வி. என். பிரியா
17. செல்வி. கே.ஏ.என்.எஸ். சமரசிங்க
18. செல்வி. டி.கே.எஸ்.ஆர். தசநாயக்க
19. செல்வி. பி.டி.சி. வீரசேன
20. திரு. எம்.எம். எரந்த
21. திரு. எம்.எஃப்.எம். பாஸில்

வெளிநாட்டலுவல்கள் அமைச்சு,
கொழும்பு

2018 மே 02ஆந் திகதி